**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், நத்தம்**

| | |
|---|---|
| அ.வ.எண். 73/2015 | பி.வா.சா. 2 |
| பெயர் : வேல் எட்வின் சுந்தர் | த/பெ. வேலாயுதம் |
| தாலுகா : மதுரை தெற்கு | கிராமம் : திருப்பாலை |
| தேதி : 04.04.2025 | வயது : 42/2025 |

1969-ம் வருடத்திய வகைமுறைச்சட்டம் பிரிவு 44-ன் படி சாட்சி அழைக்கப்பட்டு உறுதியுரை செய்யப்பட்டு அளித்த சாட்சியம்

சாட்சியம் பதிவு செய்யப்பட்ட நேரம் – 02.51 P.M. – 02.53 P.M.

<u>**வாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை**</u>

2) நிருபண வாக்குமூலத்திலுள்ள விபரங்கள் நான் சொல்லி தயார் செய்யப்பட்டது. வழக்கின் விபரமும், வாதி, பிரதிவாதிகள் தாக்கல் செய்த வழக்கு ஆவணங்களின் விபரமும் எனக்கு நன்கு தெரியும். சா.சா.ஆ.4 ஆவணம் யார் பெயரிலுள்ளது என்றால், ரத்தினநாடார் மகன் வேலாயுத நாடார் பெயரில் உள்ளது. இதில் சர்வே எண். 532/13 மற்றும் 532/14 காட்டப்பட்டுள்ளது. அதில் பழைய சர்வே எண். 212-15A மற்றும் 212-15B என குறிப்பிடப்பட்டுள்ளது. நான், எனது நிருபண வாக்குமூலத்தில் 2 வது பாராவில் பிராதில் குறிப்பிடப்பட்டுள்ள உத்தேச வரைபடத்தில், ABCD பாதை வாதியால் ஆக்கிரமிப்பு செய்யப்பட்டுள்ள பாதையாகும் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

3) மேற்படி ஆக்கிரமிப்பை நான் வழக்கறிஞர் ஆணையர் வந்து இடத்தை அளந்ததன் வாயிலாக தெரிந்து கொண்டேனா என்றால் இல்லை, என் அம்மாவின் கிரைய பத்திரத்தில் உள்ளது. என் அம்மாவின் பத்திரத்தில் ஆக்கிரமிப்பு குறித்து சொல்லப்படவில்லை. 1ம் பிரதிவாதியாகிய எனது தகப்பனார் பெயரில் கிரையம் வாங்கிய ஆவணம் வழக்கில் தாக்கல் செய்துள்ளோமா என்றால் தாக்கல் செய்துள்ளோம். நான் வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றும், என் தகப்பனார் பெயரில் கிரைய பத்திரம் எதுவும் இல்லை என்றும், அதை இந்த வழக்கில் தாக்கல் செய்யப்படவில்லை என்றும் சொன்னால் சரியல்ல.

4) 5535 சதுரடி நிலம் என் தகப்பனார் பெயருக்கு பாத்தியப்பட்டது என்பதற்கு எந்தவிதமான ஆவணமும் இல்லை என்றால், 3888 சதுரடி என் அம்மாவிற்கு கிரையம் மூலமாக வந்தது. சர்வே எண். 212–15 எனக்கு பாத்தியப்பட்டது என்பதற்கு ஆதரவாக வருவாய் ஆவணங்கள் எதுவும் தாக்கல் செய்துள்ளோமா என்றால் இல்லை. நிலவுடைமை மேம்பாட்டுக்கு முந்தைய சர்வே எண். 212–15 ஆகும். சர்வே எண். 212–15ன் பட்டா எண் எனக்கு ஞாபகமில்லை. என்னிடம் காட்டப்படும் ஆவணத்தில் சர்வே எண். 212–15 குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். இந்த ஆவணத்தில் தவசியாபிள்ளை மற்றும் 25 நபர்களின் பெயர்களில் பட்டா ஏற்பட்டுள்ளது என்றால் சரிதான். அதில் பட்டா எண்.236 என குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். ( **UDR க்கு முந்தைய பட்டா வா.சா.ஆ.7 ஆக குறியீடு செய்யப்படுகிறது**).

5) சர்வே எண். 212–15 என்பது நத்தம் நிலவரி திட்டத்தின்படி சர்வே எண். 532/13, 532/16 என எனது தகப்பனார் வேலாயுதம் பெயரில் பட்டா ஏற்பட்டுள்ள விபரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியும். நத்தம் நிலவரி திட்டத்தின்படி சர்வே எண். 532/13, 532/16 என மாறியபிறகு சர்வே எண். 212–15 என புஞ்சையில் கிடையாது என்றால் அந்த விபரம் எனக்கு தெரியாது. எங்களது சர்வே எண். தற்போது வரை 212–15 ஆக தான் உள்ளது. அந்த விபரத்தை உறுதி செய்ய ஆவணம் தாக்கல் செய்ய இயலும் என்றால் சரிதான். என்னிடம் காட்டப்படும் ஆவணம் 17.03.2025ம் தேதி இணையதளத்தில் பதிவிறக்கம் செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். இதில் சர்வே எண். 212–15 உள்ளதா என்றால் உள்ளது. அதில் நத்தம் பட்டா எண்.2848 என உள்ளது. இந்த பட்டா சின்னையா அம்பலம் மகன் வெள்ளைச்சாமி என்பவரது பெயரில் உள்ளது என்றால் சரிதான். (**சர்வே எண். 212–15, நத்தம் பட்டா எண்.2848 – இணையதள பதிவிறக்க நகல் – வா.சா.ஆ.8 ஆக குறியீடு செய்யப்படுகிறது**).

6) என்னிடம் காட்டப்படும் புகைப்படத்தில் உள்ள வீடும், காம்பவுண்ட்

சுவரும் எங்களுடையது என்றால் சரிதான். எங்களின் வீட்டிற்கு வடபுறம் தான் எங்களுக்கு பிரச்சினை. நாங்கள் கட்டக்கூடிய கட்டிடம் இட்டறை பாதையை ஆக்கிரமித்து தான் கட்டியுள்ளோம் என்றால் சரியல்ல. இடிக்கப்பட்டுள்ள கட்டிடத்திற்கு தெற்கு பகுதியில் உள்ள கட்டிடத்தை நெடுஞ்சாலை துறையினர் இடித்துவிட்டார்கள் என்றால், உயர்நீதிமன்றத்தில் அளக்க உத்தரவிடப்பட்டது, ஆனால், அவர்கள் அளக்காமல் இடித்துவிட்டார்கள். நெடுஞ்சாலைதுறையின் செய்கைக்கு எதிராக மேல்முறையீடு செய்யவில்லை என்றால் சரிதான். ( **1ம் பிரதிவாதியின் வீடு மற்றும் காம்பவுண்ட் உள்ள புகைப்படம் – C.D, இந்திய சாட்சிய சட்டம் பிரிவு 65B4 சான்றிதழ் – வா.சா.ஆ.9 ஆக குறியீடு செய்யப்படுகிறது**).

7) வருவாய் துறையினர் 1ம் பிரதிவாதிக்கும், வாதிக்கும் முறையாகத்தான் பட்டா வழங்கியுள்ளார்கள் என்றால் சரியல்ல. எனவே, வாதி கோரிய பரிகாரம் வாதிக்கு கிடைக்கத்தக்கது என்றால் சரியல்ல.

**2 முதல் 5 பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணைக்காக வழக்கு ஒத்திவைக்கப்படுகிறது.**

சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் என் முன்னிலையில் சொல்லப்பட்டு தட்டச்சரால் கணிணியில் நேரடியாக தட்டச்சு செய்யப்பட்டு பின்னர் சாட்சிக்கு படித்துக் காட்டப்பட்டு சாட்சி சரி என்று ஒப்புக் கொண்டு என் முன்னிலையில் 04.04.2025 கையெழுத்து செய்துள்ளார்.

M.Nallakannan., B.Com., B.L.,

Digitally signed by M.Nallakannan., B.Com., B.L.,
Date: 2025.04.04 00:58:42 +0530

மா.உ.ம.நீ.நடுவர், நத்தம்.